**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்**

வழக்கு எண் OS No. 17 /2008

நாள் 28.042025

**<u>குறுக்கு விசாரணை</u>**

வா.சா – 1 கார்த்திகைராணி முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>வாதி தரப்பில் 1 ம் சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

எனது தாயார் பெயர் ராஜேஸ்வரி என்றால் சரிதான். எனது தாயாருக்கு நான், 1 ஆம் வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதி ஆகியோர்கள் மகள்கள் என்றால் சரிதான். எனது தந்தை பெயர் M.R.P. இரத்தினம் பிள்ளை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 3 ல் எனது தந்தை இறந்த பிறகு விபூதி வீரமுத்து 2 ஆம் பிரதிவாதியையும் தன்னுடன் அழைத்து கொண்டு ஓடி விட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் 6 ஆம் வகுப்பு வரை உத்தமபாளையம் பாத்திமா பள்ளியில் படித்தேன்.இந்த வழக்கில் எனது தாயார் ஆன 2 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்கு உரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எனது தாயார் தாக்கல் எதிர் வழக்கு உரையில் பத்தி 8 ல் AAO No. 115/1979 ல் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் என்னுடைய தாயார் தவறு செய்ததற்கு எந்த வித ஆதாரமும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அங்ஙனம் எதுவும் சொல்லப்படவில்லை. AAO No. 115/1979 ல் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் என்னுடைய

தாயார் தவறு செய்ததற்கு எந்த வித ஆதாரமும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றாலும் நான் மேற்கூறிய வாறு அங்ஙனம் சொல்லப்படவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிப்பதால் என் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**